**CC**.**No**.31/2023

**Date**: 12.03.2026

**எ.சா. 2.** அனீஸ்குமார், த/பெ. பாஸ்கர், நாகர்கோவில் உதவி மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, புதுவயல் கிளை.

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

<u>முதல் விசாரணை</u>

**1) நான் தற்போது காரைக்குடியில் குடியிருந்து புதுவயல் பாரத ஸ்டேட் வங்கியில் கிளை உதவி மேலாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் செல்வகுமார் என்பவருக்கு எனது வங்கியில் சேமிப்பு வங்கி கணக்கு உள்ளது. கணக்கு எண் 30852762182 ஆகும். 21.05.2022 ம் தேதி பாங்க் ஆப் பரோடாவில் இருந்து ரூ. 3 ஆயிரமும், 13.08.2021 ல் ரூ.5 ஆயிரமும், 20.09.2021 அன்று ரூ. 3 ஆயிரமும், 28.09.2021 ல் ரூ.7 ஆயிரமும், 10.05.2021 ல் ரூ.2 ஆயிரமும், 23.08.2021 ல் ரூ.2 ஆயிரமும், 04.04.2020 ல் ரூ.50 ஆயிரமும், 21.04.2020 அன்று ரூ.50 ஆயிரமும், 30.06.2020 ல் ரூ.10 ஆயிரமும், 22.08.2020 ல் ரூ. 5 ஆயிரமும், 26.08.2020 ல் ரூ. 5 ஆயிரமும், 21.09.2020 ல் ரூ. 10 ஆயிரமும், வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வங்கி கணக்கு பரிவர்த்தனை 01.11.2016 முதல் 31.11.2022 வரை சான்றிட்ட நகல் எ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இருந்தும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. குறுக்கு விசாரணை முடித்து வைக்க உத்தரவிடப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 16:08:03 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)